உ
பரராஜசேகரப் பிள்ளையார் துணை

செல்வன்
# கிருபா அனந்தகோபன்
அவர்களின்





# மிருதங்க அரங்கேற்றம்

தலைவர்
மஹா வித்துவான். கலாபூஷணம்.
பிரம்மஸ்ரீ. ந.வீரமணி ஐயர் MA.

28–11–1999
ஞாயிற்றுக் கிழமை

இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோவில்
கல்யாண மண்டபம்

NANTHA Graphics

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் திருவடி துணை

இணுவையூர் து. கிருபாகரமூர்த்தி – புனிதவதி தம்பதிகளின்

சிரேஷ்டபுத்திரனும்

மிருதங்க கலா வித்தகர், சங்கீதரத்தினம் ,

லயஞான பாநு லயஞான சுரபி, கலாபூஷணம் ,

## திரு.க.ப. சின்னராசா அவர்களின்

(பகுதி நேர மிருதங்க விரிவுரையாளர் கோ. ஆ. ப.கலாசாலை) மாணவனுமான

திருநிறை செல்வன்

# கிருபா – அனந்தகோபன்

அவர்களின்

# மிருதங்க இசை அரங்கேற்றம்

இடம் :– இணுவில் ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் கோவில் கல்யாணமண்டபம்

காலம் – 28.11.1999 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணி

தலைவர்:– கலாபூஷணம் இயல் இசை வாருதி மஹாவித்துவான்

பிரம்மஸ்ரீ ந.வீரமணிஐயர் M.A அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருநாதரின் ஆசியுரை

லயக் கருவிகளுள் சாலச் சிறந்ததும் தொன்மையும் உடைய பக்க வாத்தியத்திற்கு ஏற்ற தக்க வாத்தியமாக அங்கம் வகிப்பது மிருதங்கம் ஆகும். நந்தி பகவான் முதல் நாராயணன் ஆகிய தெய்வங்களால் வாசிக்கவும், பூசிக்கவும் பெற்றது. தண்ணுமை எனும் தொன்மை வாத்தியமாகும். தில்லை நடராஜனின் திருநடனத்திற்குத் திருமால் சிறப்புற வாசிக்கப் பெற்ற பெருமையுடையது இவ்வாத்தியமாகும். உடுக்கினது ஓங்கார ஒசையினைத் தாங்கமாட்டாது அஞ்சி ஒடிய தேவர்களுக்காக அதனை முறித்து டமருகமாக்கி இனிய நாதத்துடன் தமது திருநடனத்திற்கு வாசிக்க வைத்தார் எம்பெருமான். இத்தகைய இனிய நாதமுடைய இவ்வாத்தியம் இன்று பல லய மேதைகளாலும், லயக்கலைஞர்களாலும் ஏற்றமுற வாசிக்கப்படுவதோடு ''சொக சுகா மிருதங்க தாளமு'' என ஸ்ரீ தியாகையரின் கீர்த்தனையிலும் போற்றப்பட்டுள்ளது.

இத்தகைய சிறப்பு மிக்க வாத்தியத்தினை இன்று பலரும் விரும்பிக் கற்று வருகின்றார்கள். இவ்வாறு கற்றுவரும் மாணவர்களுள் செல்வன் கி.அனந்தகோபனும் ஒருவராவர். கலைஞர்களும், இசையார்வலர்களும் நிறைந்து விளங்கும் இணுவைக் கிராமத்தில் இசையார்வம்மிக்க கிருபாகரமூர்த்தி – புனிதவதி தம்பதியர்களின் சிரேஷ்ட புத்திரன் அனந்தகோபன் இசை ஞானம் உடையவராவர்.

இணுவில், இளந்தொண்டர் சபையால் எனது மாணவன் திரு. அருணகிரிவாசன்(ஆசிரியர்) அவர்களிடம் சிலகாலம் மிருதங்கம் பயின்ற பின்னர், என்னிடம் சுமார் ஆறு ஆண்டு காலம் பயின்று வ.இ. ச. சபையின் ஐந்தாம் ஆண்டுப் பரீட்சையில முதலாம் பிரிவில் சித்தி பெற்றுள்ளார். இவர் கல்லூரிப் படிப்பில் இம்முறை ஜி.சி. ஈ (உயர்தரம்) கணித பாடத்தில் தோற்றி சித்தியடைந்துள்ளார்.


இவர் மாதா, பிதா , குரு, தெய்வ பக்தி மிகுந்தவர். மாணவர்களுள் அன்பு,அடக்கம் பண்பு நிறைந்தவர். இன்று, தான் கற்ற வித்தையினை அரங்கின் முன் சமர்ப்பிக்க உள்ளார். மிருதங்கத்தில் நன்கு தேர்ச்சி பெற்ற இவரை உற்சாகமூட்டி வாழ்த்தித் தங்கள் பாராட்டுக்களையும் அன்புடன் வழங்குமாறு ரசிகப் பெருமக்களைப் பணிவன்புடன் வேண்டுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இவர் இக்கலையில் மென் மேலும் சிறப்புற் றோங்கித் தமக்கும் தாய் நாட்டிக்கும் பெருமை பெற்றுத் தரவும் இக்கலையில் பூரண வளர்ச்சி பெறவும் வாழ்த்தி எனது ஆசிகளை பரராஜ்சேகரப பிள்ளையாரின் திருவருளோடும் குருநாதரின் ஆசியோடும் வழங்குகின்றேன்.

சுபம்.



*வளர்க இவரின் கலைத்துறை*
*வாழ்க இவரின் மிருதங்கக் கலை.*

இங்ஙனம்
கலா பூஷணம்
*கலாவித்தகர் க.ப-சின்னராசா*
சங்கீத ரத்தினம் (டிப்ளோமா)
லயஞான சுரபி, லயஞான பானு
பகுதி நேர மிருதங்க விரிவுரையாளர்
(அரசினர் ஆ.ப.க. கோப்பாய்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

அரங்கக்கலைகள் யாவற்றிற்கும் இன்றியமையாத லயக்கருவி மிருதங்கம் நந்திகேஸ்வரர், மஹாவிஷ்ணு, உமாதேவி ஆகியோரால் ஆதியில் சிவதாண்டவத்திற்கு இசைக்கப்பெற்றசிறப்பான தெய்வீகக்கருவியாகும். இத்தகைய இசைக்கருவிக்கான அரங்கேற்றம் நிகழ்வது பெருமைக்குரியது. இன்று அரங்கேறுகின்ற சிரஞ்சீவி அனந்தகோபன் கிருபாகரமூர்த்தி பாராட்டிற்குரிய இவருடைய பெற்றோர கிருபாகரமூர்த்தி புனிதவதி ஆகியோரும், இவருடைய குருவாகிய கலாபூஷணம் ப.சின்னராசா அவர்களும் பெரும் பேறுடையவாகள்.

யாழ்ப்பாணம் இணுவிலில் இந்துப்பண்பாடு நிறைந்த சூழலில் இம்மாணவன் தனது கலையினைப் பயின்றும் அரங்கேறுவது சிறப்பானது. இவர்பெற்றோரும், ஆசிரியரும் பாரம்பரியம் பேணிக்காப்பவர்கள் எனவே இவர்கள் வழியில் உருவான இவ்விழங்கலைஞர் கலை இறையருளால் தழைத்தோங்கும் என்பதில் ஐயமில்லை . ஆசிரியர் ப.சின்னராஜா அவர்கள் இலங்கையில் மூத்தகலைஞர். முதன் முதலாக ஆசிரியர் தராதரம் பெற்றவர் சாகித்தியம் படைப்பதிலும் ஆற்றலுள்ளவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆசிரியர்பயிற்சிகலாசாலையிலும் இராமநாதன் நுண்கலைக்கழகத்திலும் அதிதிவிரிவுரையாளராகப்பணியாற்றியவர். செல்வன் அனந்தகோபன் தனது ஆரம்பக்கல்வியை இணுவில் சைவப்பிரகாசவித்யாலத்திலும் இடைநிலைக்கல்வியை கொக்குவில் இந்துக்கல்லூரியிலும் பயின்றவர். மேலும் மிருதங்கக் கலையில் வட இலங்கைச் சங்கீதசபைப்பரிட்சையில் 5ஆம் ஆண்டு சிறப்பாகச் சித்திபெற்றவர். மிருதங்கக்கலையில் சிரத்தையான முன்னேற்றம் பெற்றவர், இக்கலைஞனைப்பெற்றோர் அவையில் முந்தியிருக்கச் செய்துள்ளனர். இதற்காக பெற்றோர் எவ்வளவு தவம் செய்திருப்பார்கள் என்பது வெளிப்படை.

ஸ்ரீ தியாகராஜசுவாமிகள் மிருதங்கத்தின் சுகமான இசைபற்றி சொகசுகா மிருதங்கதாளமு'' என்று தமது கீர்த்தனையில் குறிப்பிட்டுள்ளார். இவ்வகைச்சிறப்பிடம் பெற்ற மிருதங்க அரங்கேற்றம் சிறப்புறநிகழ எமது ஆசிகள் . மேலும் இரங்கேற்றும் அனந்தகோபன், ஆனந்தமாக அரங்கேற்றதில் ஆனந்தவாத்தியமான மிருதங்கத்தை வாசிக்கவும் , இக்கலையை மேலும் கற்றோர் சகவாசத்துடன் வளர்த்து சிறந்த கலைஞனாக கலையுலகில் பிரகாசிக்கவும் எல்லாம் வல்ல ஸ்ரீ நடராசாப்பெருமானின் திருவருளுடன் ஆசிகூறிக் கொள்கிறேன்.

"ஸர்வமங்களாகி பவந்து"

இங்ஙனம்,

*பிரம்மஸ்ரீ அ.நா.சோமாஸ்கந்தசர்மா.* M.Phil.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

சைவமும் தமிழும் பல கலைகளும் ஒருங்கே செழித்து வளரும் இணுவையம் பதியில் பல கலைஞர்கள் தோன்றி கலைத்தாய்க்கு தம்மை அர்ப்பணித்து பெருமை சேர்த்து இருக்கிறார்கள். அந்த வரிசையில் இன்று அந்தப்பணிக்கு ஓர் வாரிசாக மிருதங்க அரங்கேற்றம் செய்ய வந்திருக்கிறார் செல்வன் கிருபாகரமூர்த்தி அனந்தகோபன் அவர்கள் கல்வி கேள்விகளிலும் ஒழுக்கத்திலும் தெய்வ பக்தியிலும் சிறந்து விளங்கும் அவருக்கு மெருகூட்ட இந்த மிருதங்க வாசிப்புக் கலை கைவண்ணமாக வந்திருக்கிறது. இவருக்கு ஆசானாக வாய்த்திருப்பவர் மிகச் சிறந்த வித்துவான் ''கலாபூஷனம் '' திரு.க.ப.சின்னராசா அவர்கள். மிகச் சிறந்த வித்துவான்களை உருவாக்கியவர். சிறந்த வித்துவத் தன்மையும் அடக்கமும் ஒழுக்கமும் தெய்வ பக்தியும் மிகுந்து விளங்கும் ஓர் அற்புதக் கலைஞர். ''தாரமும் குருவும் அவரவர் தலைவிதிப்படி '' என்ற வாக்கிற்கமைய செல்வன் அனந்தகோபன் அவர்களுடைய பெற்றோரும் அவரும் செய்த புண்ணிய பலத்தினால் வித்துவான் சின்னராசா அவர்கள் குருவாக அமைந்திருக்கிறார். சிறந்த புதல்வனைப் பெற்ற பெற்றோரும் சிறந்த குருவாகிய சின்னராசா அவர்களும் வளரும் கலைஞனாகிய அனந்தகோபனும் பல வளங்களும் பெற்று பல காலம் வாழ எல்லாம் வல்ல பரராஜ சேகரப் பிள்ளையாரை வேண்டுகிறேன்.

**ஸ்ரீ பரராஜ சேகர பிள்ளையார் கோவில்**
**இணுவில்**

இங்ஙனம்,
*வை. சோமஸ்கந்தகுருக்கள்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயத்ரீபீடம் தர்மசாஸ்தா குருகுலம்
# ஆசியுரை

சங்கீதத்தில் வாய்ப்பாட்டிற்கு துணை செய்யும் வாத்யங்களில் மிருதங்கம் முதன்மை வகிக்கிறது. இந்த வாத்யத்தை பயிலுவதற்கும் பயிற்றுவிப்பதற்கும் பூர்வஜன்ம புண்யம் வேண்டும். எல்லோராலும் சாதாரணமாக இதைக் கையாள முடியாது. சிவாகமங்களில் மற்ற எல்லா வாத்யத்திற்கும் முதன்மை பெறுகிறது மிருதங்கம்.

மிருதங்க வீணா வேணு பணவ தாளகாஹன, சங்க, படஹாத்யை, வாத்யை பேரீசங்கோஷண மங்களம் கரோமி'' இந்த மந்திரத்தில் கூறப்படும் ஒன்பது வாத்யங்களில் மிருதங்கம் முதன்மை பெறுகிறது. இத்துணைப் பெருமை வாய்ந்த மிருதங்கத்தை கற்பிப்பதில் பூர்வ ஜன்ம புண்யம் செய்தவர் மிருதங்க வித்துவான் திரு. சின்னராசா அவர்கள். அது மட்டுமல்ல பலரை அரங்கேற்றஞ் செய்வித்த பெருமையும் அவருக்கு உண்டு. அவருக்கே உரித்தான இலகுவான முறையில் அவர் கற்பிப்பதே தனி அழகாகும். அவரிடம் கற்கும் பாக்கியம் பெற்ற கிருபாகரமூர்த்தியின் புதல்வன் செல்வன் கிருபா – அனந்தகோபன் மிகுந்த பாக்கியம் செய்தவர். ஒரு சிறந்த குருவிடம் சிட்சை பெற்ற அவரின் அரங்கேற்றம் எல்லாச் சிறப்புகளோடும் நடைபெற பரராஜசேகர விநாயகர் திருவருள் துணை நிற்கப் பிரார்த்தித்து உள்ளன்போடு ஆசிகூறுகின்றேன்.

இப்படிக்கு

*சிவஸ்ரீ.தா.மகாதேவக்குருக்கள்*

**********

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# ஆசியுரை

இணுவில் என்றால் சங்ககாலத்தில் கூறப்படுகின்ற முத்தமிழிசை தவழுகின்ற இடம் என்று பலராலும் ஏற்றுக்கொள்ளப்படும். ஓர் இடமாகும். அப்படியான இணுவையம்பதியில் அவதரித்த கிருபாகரமூர்த்தி அனந்தகோபனுக்கு மிருதங்க அரங்கேற்றம் என்றவுடன் மிகவும் உளமகிழ்ந்தேன்.

இராவணேஸ்வரன் இசையால் ஆடற்கூத்தன் அம்பலவனை கவர்ந்தான் . அதுபோல அனந்த கோபனும் ஆடற்கூத்தனை மட்டுமல்ல சகல மக்களையும் தன்னுடைய மிருதங்க நாதத்தால் கவரவேண்டும் என முத்துமாரி அம்மனின் அருளை வேண்டி நிற்கிறேன். அத்துடன் கலாபூஷனம் க.ப. சின்னராசா ஆசிரியராக் கொண்டு மிருதங்கத்தை கற்றுள்ளார். ஆகவே பெற்றோர்களுக்கும் ,குருவுக்கும் பெரும் புகழ் ஈட்டித்தர வேண்டும் என ஆசி கூறுகிறேன்

சுபம்!

இப்படிக்கு,

*சோ.சந்திரசிகாமணி குருக்கள்,*

முத்துமாரியம்மன் தேவஸ்தானம்.

மந்துவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் துணை

## ஸ்ரீ.கி.அனந்தகோபன் அவர்களின்
## மிருதங்க அரங்கேற்ற வாழ்த்து

ஓங்கார நாதமணி ஒலிக்கும் கோயில்
ஒளிஇணுவைப் பரராஜசேக ரன்தாள்
பாங்கான வைகறைப் போதில் வந்தே
பக்தியொடு துதிசெய்து கணபதியை
ரீங்கார முரசொலித்துத், தோளில் தூக்கி
இதயத்தில் பூஜிக்கும் அனந்த கோபன்
பூங்காவ னப்பதியாம் இணுவை யூரில
புனிதமிரு தங்கஅரங் கேற்றம் வாழி.

பூக்கொய்து வடம்புனைந்து இறைவன் நீழல்
புல்லரிக்கும் பக்தியொடு பூஜை செய்து
ஊக்கமிகு கலைகளிலே ஆர்வம் கொண்ட
உயர்கிருபா கரமூர்த்தி தம்பதிகள்
ஆக்கியநற் பெருந்தவத்தால் உதித்த செல்வன்
அனந்தகோ பனும்மிரு தங்க இசை
பாக்கவிஞன் சின்னராசாக் குருவின் மூலம்
பயின்றனனே அரங்கேற்றம் இனிதே வாழி.

நாதமிகு தங்கஇசைக் கலைநு ணுக்கம்
நளினமிகு கற்பனையின் விவகார ரங்கள்
ஆதரவாய்த் தாள லய வின்யா ஸங்கள்
அற்புதஞ்சேர் மிருதங்கள் கதிநடைகள்
போதனைசெய் குருமகிழ்ந்த சீட னான
புகழ்பூத்த இளங்கலைஞன் அனந்த கோபன்
பூதலத்தில் நந்தகேஸ் வரன் அருளால்
பொலிந்தமிரு தங்கஅரங் கேற்றம் வாழி!

''சுபம்''

இங்ஙனம்.
கலாபூஷணம் ,கலாரத்னா
மஹாவித்துவான்
இணுவில் பிரம்மஸ்ரீ. ந.வீரமணிஐயர் **M.A.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட்கவியின் வாழ்த்து



பொன் பெருகும் இணுவையூர் பொலியும் அன்பான
புனித கிருபாகர மூர்த்தி மைந்தன்
இன்பநலம் திகழ் அனந்த கோபன் நாதம்
இனிய மிருதங்கமணி யாகிப் பாரில்
முன் பெருகு லயசுருதிச் சிறப்புப் பொங்கி
முக்கண்ணன் விநாயகரின் கருணைதாங்கி
அன்பு வளர் கலைஞானச் செல்வனாகி
ஆதவன் போல் பல்லாண்டு வாழி!,வாழி!!

ஸ்ரீநாகவரத நாராயணர்தேவஸ்தானம்.
நாகேஸ்வரம்
அளவெட்டி
(யாழ்ப்பாணம்)

அன்பன்
அருட்கவி
*சீ.விநாசித்தம்பி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லாண்டு வாழ்க

செல்வன் கிருபாகரமூர்த்தி அனந்த கோபன் அவர்களின் மிருதங்க அரங்கேற்ற நிகழ்வு இன்றாகும். இவர்களுக்கு வழிகாட்டிய சங்கீத பூஷணம் அவர்களின் சேவை பல்லாண்டு காலம் தொடர ஆசி கூறி. இன்றைய விழாநாயகன் செல்வன் அனந்தகோபன் அவர்களின் அரங்கேற்றம் மிகவும் சிறப்பாய் அமைய வேண்டும் என்றும் இவருடைய சேவை இன்னும் பல மிருதங்க வித்துவான்களை உருவாக்க வேண்டும் என்று ஆசி கூறி பல்லாண்டு பல்லாண்டு காலம் வாழியவே.

சுபம்,

இங்ஙனம்.

*சிவஸ்ரீ ச.சிறீஸ்கந்தராஜா குருக்கள்*

*ச.நீ.சிறீஐயர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை.

யாழ்ப்பாணம் இணுவிலைச் சேர்ந்த திரு. கிருபா. அனந்தகோபனின் மிருதங்க அரங்கேற்றம் நிகழவிருப்பது அறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைவதோடு, முதற்கண் அவருக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இசைக்கு வசமாகாதவர் எவருமிலர். அத்தகைய இசைக்கு மிருதங்க வாத்தியம் இன்றியமையாதது. ஸ்ருதியும் லயமும் இணையுமிடத்து அந்த இசை இன்பத்துக்கு எல்லையே கிடையாது. எனவேதான் எமது பண்பாட்டிலே இசையைத் தெய்வீகக் கலையாக எமது முன்னோர்கள் பேணிப் பாதுகாத்து வந்துள்ளனர். அதன் பயனாய் இசைத் துறையில் ஒரு நீண்ட பாரம் பரியமும் உருவாகி வந்துள்ளது. இம்பாரம்பரியத்தோடு தன்னை இணைத்துக் கொள்ளும் வகையில் மிருதங்க வாத்தியத்தில் திரு. அனந்தகோபன் மிக ஆர்வத்துடன் ஈடுபாடுகொண்டு தமது குருவிடம் உரிய பயிற்சி பெற்று, இறைவனது திருவருளால் இன்று அரங்கேற்றம் காணும் பாக்கியத்தைப் பெற்றுள்ளார்.

திரு.அனந்தகோபன் இணுவில் கந்தசுவாமி கோயில் இளந் தொண்டர் சபையினர் நடாத்தும் மிருதங்க வகுப்பில் கலாபூவுணம் க.ப.சின்னராசா அவர்களிடம் பதினொரு வருடகாலம் இவ் வாத்தியத்தில் பயிற்சி பெற்றவர். கலாபூஷணம் க.ப.சின்னராசா மிருதங்க வாத்தியத்தில் தனக்கென ஓரிடத்தை ஏற்படுத்திக் கொண்ட சிறந்த மிருதங்க கலைஞராவார்.

தமது மைந்தன் சிறந்ததொரு கலைஞனாக மிளிர வேண்டும் என அனந்தகோபனின் பெற்றோர்கள் கொண்ட ஆர்வத்தின் பெறுபேறாக இந்த அரங்கேற்றம் நிகழ்கின்றது. தெய்வ ஆசியும் குருவினது ஆசியும் பெற்றோரது ஆசியும் கிடைக்கப் பெற்ற நிலையில் திரு. அனந்தகோபனின் இந்த மிருதங்க அரங்கேற்றம் இசைவல்லுனர்களும் ஆர்வலர்களும் கூடியுள்ள சபையில் சிறந்த அங்கீகாரத்தைப் பெறும் என்பது எமது நம்பிக்கை

இவரது இவ்வரங்கேற்றம் சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் நிகழ எல்லாம்வல்ல விநாயகப்பெருமானது திருவருள் பொலிவதாகுக. திரு. அனந்த கோபன் இவ்வாத்தியத்தைக் கையாளுவதில் மேலும் பல நுட்பங்களைக் கற்று இசைத்துறையில் ஆற்றல் மிகு கலைஞனாக மேன்மையடையவும் தொடர்ந்து இக்கலையை வளர்ப்பதில் பெரும் ஈடுபாடு கொள்ள வேண்டும் என வாழ்த்துவதில் பெரும்மகிழ்ச்சியடைகின்றேன். இவரது கலையார்வம் எமது இசைப்பாரம்பரியத்திற்குப் பெருமை சேர்ப்பதாகுக.

**பேராசிரியர் கலாநிதி ப.கோபாலகிருஷ்ண ஐயர் ,**

தலைவர் இந்து நாகரிகத்துறை,

யாழ் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

செல்வன் கிருபாகரமூர்த்தி அனந்தகோபனின் மிருதங்க அரங்கேற்றம் இன்று நிகழ்வது எனக்கு அளவில்லாத மகிழ்ச்சியைத் தருகின்றது. அனந்தன் ஓர் கீழ்ப்படிவுள்ள மாணவன். என்னிடம் சில காலம் வாய்ப்பாட்டுப் பயின்றவன்.

திரு.திருமதி கிருபாகரமூர்த்தி குடும்பத்தினர் மிகுந்த இசையார்வம் கொண்டவர்கள். தமது பிள்ளைகளை மிருதங்கம், வாய்ப்பாட்டு,வயலின் போன்ற துறைகளில் ஈடுபடுத்தி உள்ளனர். அனந்தகோபன்உயர்தர வகுப்பில் கணிதத்துறையைப் பயின்றாலும் இசைத் துறையிலும் ஆர்வம்கொண்டு வட இலங்கை சங்கீத சபையின் ஐந்தாம் தரப் பரீச்சையிலும் முதலாம் பிரிவிலும் சித்தியெய்தியுள்ளர்.

அரங்கேற்றத்துடன் நின்று விடாது இத்துறையில் மேலும் நன்றாக வளர் அதாவது ஆசிரியர் கலாபூஷணம் திரு.க.ப.சின்னராசா அவர்களும் இசை வித்துவான்களும் ஊக்கமளிக்க வேண்டும். இவர் மேலும் வளர்ந்து சகல நலன்களும் தீர்க்காளும் பெற்று இசைச் சேவையாற்ற எல்லாம் வல்ல இணுவில் பரராசசேகரப் பிள்ளையாரை வேண்டி எனது ஆசிகளையும் தெரிவிக்கின்றேன்.

கலையின்பமே நிலையின்பமாம்''

சங்கீத வித்துவான்,

**க.இராமநாதன்,**

கந்தசாமி கோவிலடி,

இணுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சிநிரல்

தேவாரம்-

தலமையுரை- இயல் இசை வாருதி, கலாபூஷணம் மஹாவித்துவான்
பிரம்மஸ்ரீ.ந. வீரமணிஐயர் M.A அவர்கள்

வரவேற்புரை- ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம் அவர்கள்

ஆசியுரை- பிரம்மஸ்ரீ.வை.சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்கள்
பிரம்மஸ்ரீ. ஸ்ரீஸ்கந்தராஜக் குருக்கள் J.P அவர்கள்
ஸ்ரீலஸ்ரீ. சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்அவர்கள்
(நல்லை ஆதீன முதல்வர்)
அருட்கவி. சீ. விநாசித்தம்பி அவர்கள்
(தலைவர், இந்துசமயப் பேரவை

வாழ்த்துரை- பேராசிரியர்.ப.கோபாலகிருஷ்ண ஐயர் அவர்கள்
(தலைவர் இந்துநாகரிகத்துறை, யாழ் பல்கலைக்கழகம்)
திரு.து.வைத்திலிங்கம் அவர்கள்
(மேலதிக அரசாங்க அதிபர் யாழ்செயலகம்)
திரு.ஆ.மகாலிங்கம் அவர்கள்
(வலி.தெற்கு பிரதேச செயலர் உடுவில்)

குருவைக் கௌரவித்தல்-
அரங்கேற்ற நிகழ்வை அணிசெய் கலைஞர்களைக்
கௌரவித்தல்

இசையரங்கு.கலைஞர்கள்-

பாட்டு- சங்கீதபூஷணம் திரு.சு.கணபதிப்பிள்ளை அவர்கள்
(முன்னைநாள் பிரதிக்கல்விப் பணிப்பாளர், வலிகாமம்
வலயம்2)

வயலின்- இசைஞான திலகம் உ.இராதாகிருஷ்ணன் அவர்கள்

மிருதங்கம்- செல்வன கி.ஆனந்தகோபன் அவர்கள்

கெஞ்சிரா- சங்கீதரத்தினம் திரு. மா. சிதம்பரநாதன் அவர்கள்
(நுண்கலைப்பீட மிருதங்க விரிவுரையாளர்)

டொலக்- க.கயன் அவர்கள்

கடம்- செல்வன் நா. சிவசுந்தர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டுரை- கலாநிதி சபா. ஜெயராசா அவர்கள்

(தலைவர். நாட்டியத்துறை, இராமநாதன் நுண்கலைக் கழகம்)

**பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள்**

(பீடாதிபதி, உயர்பட்டப்படிப்புக்கள் பீடம், யாழ் பல்கலைக்கழகம்)

**திரு.க.தேவராசா.அவர்கள் M.A**

(தலைவர் வர்த்தகத் துறை யாழ் பல்கலைக்கழகம்)

சங்கீத பூஷணம் **நா.வி.மு.நவரத்தினம்**

(தலைவர், இராமநாதன் நுண்கலைக் கழகம், யாழ் பல்கலைக் கழகம்)

செஞ்சொற்செம்மல் **ஆறு. திருமுருகன் அவர்கள்**(ஆசிரியர் (ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்)

**திரு.நா.கிருபாகரன்** (இளந்தொண்டர்சபை)

மதிப்பீட்டுரை- **பிரம்மஸ்ரீ அ.நா.சோமாஸ்கந்தசர்மா அவர்கள்**

(மிருதங்க விரிவுரையாளர், இராமநாதன் நுண்கலைக்கழகம் யாழ் பல்கலைக் கழகம்)

சங்கீத நாதசாகரம் **திரு.இ.கேதீஸ்வரன் அவர்கள்**

(நாதஸ்வர வித்துவான்)

திருப்புகழ்-

நன்றியுரை - **திரு.சோ.பரமசாமி அவர்கள் B.Sc**

**இசை அரங்கில் இடம் பெறும் பாடல்கள்**

1. வர்ணம்- நவராகமாலிகை-ஆதிதாளம்.
2. ஓம் பிரணவா- கம்பீரநாட்டை- ரூபகதாளம்
3. உன்னை வேண்டினேன்- பவப்பிரியா-ஆதிதாளம்
4. மரிவேரேகதி- ஆனந்தபைரவி- மிஸ்ரசாபு.
5. அருள்மாரி- சாரங்கா- கண்டசாபு.
6. தேவிநீயேதுணை-கீரவாணி-ஆதிதாளம்
7. நினரஞ்சினானு- மாளவி-ஆதிதாளம்
8. இராகம்-தாளம்-பல்லவி-கல்யாணி-ஆதிகண்டநடை மிருதங்கயதி.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | ப | | | |
| | செ | ர | ஸ்ரீ | ப | |
| ரா | க | ரா | செ | ர | ரா |
| ஜ | ரா | ஜ | க | ரா | ஜ |
| ரே | ஜ | சே | ரா | ஜ | |
| | ரே | க | ஜ | | |
| | | ரே | | | |

ராஜரே செகராஜரே பரராஜசேகரோ(5)

ஸ்ரீ செகராஜ பரராஜ ராஜ

9. பூசிக்க வேண்டும் ஐயே-ஹம்சானந்தி -ஆதிதாளம்
10. சின்னவயதினிலே- மாண்டு - ஆதிதாளம்.
11. திருப்புகழ்-தமருமமரு-கல்யாணி - ஆதி திஸ்ரநடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

பாடல், வீணை, முழவம், குழல், மொந்தை பண்ணாகவே ஆடுமாறும் வல்லான் அம்பலக் கூத்தன் '' அரங்கை ஆட்டுவிப்பது முழவுகுழல் வழி நின்ற யாழும் யாழ்வழி நின்ற முழவும் நம்தமிழ் மக்களின் அநாதியாம் அழியாப் பூர்வீகச் சொத்துக்கள்.

ஆடலையும் பாடலையும் அரங்கில் நெறிப்படுத்தும் முழவு பற்றி சிலப்பதிகார அரங்கேற்றுக்காதை ''தன்னுமை ஆசிரியன் அமைதி ''யில் மிக அருமையாகக் கூறுதல் காண்பாம்!

மந்த முழவம் இயம்ப மலைமகள் காண நின்றாடும் பரம்பொருளாகிய சிவனின் ஆட்டத்துணையாகி அரங்குறும் பெருமை குழலை யாழை விட முழவுக்கே அனந்தம்.. எனவே பரம்பொருளின் தேவசபையில் இருந்து தொடங்கும் இசை மரபின் வழி வந்த உலகியல் கலைமரபு பல்வகை முழவுகளை இயக்கும் வரலாறு சங்கத்தால் நன்கு பெறப்படும் .

இவ்வகையில் இசை நூலாகிய பரிபாடல் பண்ணார் முழவின் இசை எழ என (பரி – 17ம் பாவில் 12ம் அடி ) குறித்தல் காண்பாம். 4 அன்றியும் அக நானூறு 5, நற்றிணை 6, மலைபடுகடாம் 7 , புறநானூறு 8 , பதிற்றுப்பற்று 9, குறுந்தொகை 10, ஐங்குறுநூறு 11, குறிஞ்சிப்பாட்டு 12, முதலிய நூல்கள் எல்லாம் தண்ணுமை பற்றியும் பண்ணமை முழவு பற்றியும் விரிக்கக் கூறுதல் காண்பாம்.

இன்னிசை வீற்பாணர் யாழ்ப்பாணத்தில் குடி கொண்ட பகுதி இன்பூவில் பகுதியாகும் இது இற்றை நாளில் இணுவில் என்று மருவியது. கலைக்கூடல் எனும் இன்வில் கலைமரபில் தோன்றிய கிருபாகரமூர்த்தி – அனந்தகோபன் இன்று முழவு வாத்ய தேர்ச்சி உடையவராகி அரங்கேறுதல் கலை உலகிற்கு மகிழ்வு தரும் செய்தியாகும். முழவு வாத்திய ஆசானாகிய கலாபூஷணம் திரு க.ப.சின்னராசா அவர்களின் மாணவராகி இக்கலையைப் பெற்றுள்ள செல்வன் – அனந்தகோபன் இவ்வழியில் நிறையப் பயின்று சிறந்த ஆசானாகிட எல்லாம் வல்ல சிவகாமி சமேத ஆனந்த சபேசனை உளமிருத்தி வாழ்த்து கின்றோம். வாழ்த்துகின்றோம்.

சுபம்,


*நா.வி.மு.நவரத்தினம்* M.MUS.PHL

தலைவர், இசைத்துறை

யாழ் பல்கலைக் கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

பழைமைக்குப் பழைமையாயும் புதுமைக்குப் புதுமையாயும் விளங்கும் தோற்கருவியாகிய மிருதங்கம் தண்ணென்ற ஒலி யெழுப்பும் தண்ணுமையாயும், முதிர்நிலை அதிர்வுகளை ஏற்படுத்தும் முதிர் முழவாகவும், மண்ணொடு விண்ணை இணைக்கும் மிடற்றொலியுடன் இணையும் காலக்கருவியாகவும் பண்ணிசையுடன் இணைந்த பழனக் கருவியாகவும், கர்நாடக சங்கீதத்துடன் இணைந்த லயக்கருவியாகவும் விளங்குகின்றது. மிருதங்கக் கல்வியை இந்நாட்டிலே வளமுறச்செய்யும் நல்லாசான்களுள் ஒருவராகிய திரு சின்னராசா அவர்களிடம் வரன் முறையாகக் கல்விகற்ற செல்வன் கிருபாகரமூர்த்தி அனந்தகோபன் அவர்களின் அரங்கேற்றம் சிறப்புற எனது நல்வாழ்த்துக்கள்.

மிருதங்க இசையின் அழகியற் பண்புகள் தொடர்பாடலையும் விஞ்சிய தெய்வீகப் பண்புகளுக்கு இட்டுச்செல்லும் என்ற மரபுவழி நம்பிக்கையே அதனைத் ''தேவ வாத்தியம் '' என்ற நிலைக்கு உயர்த்தியுள்ளது.

யாழ் பல்கலைக்கழகம்.

-கலாநிதி சபா. ஜெயராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# வாழ்த்துரை

கலை நிறைந்த திருப்பதி எங்கள் இணுவைப் பெரும்பதி. ஈழத்திருநாட்டில் புகழ்பூத்த கலைஞர்களை உருவாக்கிய இணுவையூரில், இறைபக்திமிக்க குடும்பத்தில் உதித்த கிருபாகரன் புனிதவதி தம்பதிகளின் அருமைந்தன் செல்வன் அனந்தகோபனின் மிருதங்க அரங்கேற்றச் செய்தி அறிந்து அகமகிழ்கிறேன். தெய்வீகக் கலைஞான மிருதங்க வித்துவத்தை, நாடறிந்த கலைப் பேராசான் உயர்திரு. சின்னராசா அவர்களிடம் முறையாகப் பயின்று அரங்கேற்றுவது பெருமைக்குரியது. தமிழகத்து வித்துவான் மிருதங்கமேதை இராமநாதன் அவர்கள் தனது கலை வாழ்வுபற்றி அண்மையில் பத்திரிகையில் செவ்வி வழங்கிய போது தன் தலை மாணாக்கனும் சிறந்த மிருதங்க வித்துவானுமாகிய ஈழத்துக் கலைஞர் சின்னராசா அவர்களைத் தன் மதிப்பார்ந்த சீடனாப் புகழ்ந்துரைத்துள்ளார். அத்தகைய பேராளரிடம் கலை ஞானம் பெற்ற பெருமை அனந்தகோபனுக்கு வாழ்நாளில் கிடைத்த பெரும் பேறாகும். நந்தியம் பெருமானின் நல்லாசியோடும் , குருவின் திருவருளோடும் பரராஜசேகரன் சபையிலே அரங்கேற்றி தன் ஆற்றலினை சமர்ப்பணமாக்கும் செல்வன். அனந்தகோபன் – பெரும் கலைஞனாகி எம் திருநாட்டுக்கு பெருமை சேர்க்க வேண்டுமென எல்லாம் வல்ல எம் குலதெய்வங்களை வேண்டிப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

செஞ்சொற்செல்வன்,

**ஆறு.திருமுருகன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

இறைவனோடு இசைவிப்பது இசை. ஏழிசையாய் இசைப்பயனாய் இருக்கின்றான் இறைவன் என்பார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். வாயே வாழ்த்து கண்டாய் என்றார் திருநாவுக்கரசு சுவாமிகள். வாழ்த்து – இசைப்பாடலுமாம். இசைவிற்பன்னர் ஒருவருடைய இசைக்கு மெருகூட்டுபவை பக்கவாத்தியங்கள், இசைக்கருவிகள்.

இசைக்கருவிகளில் தோற்கருவியாகிய மிருதங்கவாத்தியத்தை முழவு, மத்தளம் என்றும் அழைப்பதுண்டு. நந்தி மத்தளம் கொட்ட நாரதர் கீதம் பாட'' என்ற தொடராலும் இசையின் சிறப்பை அறியலாம். இதில் இருந்து மிருதங்கவாத்தியத்தின் பழமையையும் சிறப்பையும் உணரலாம். மிருதங்கம் சிறந்த ஒரு தாளவாத்தியமுமாகும்.

இந்த நூற்றாண்டில் மத்திய காலப் பகுதியில் பாலக்காடு டி.எஸ்.மணிஐயர், பழனி சுப்பிரமணிய பிள்ளை உள்ளிட்ட பலர் மிருதங்கத்துறையில் புகுந்த இணையற்ற புகழைப் பெற்றார்கள். இசைக்கலையில் 'சிம்மம்' எனத் திகழ்ந்தவர் செம்பை வைத்தியநாத பாகவதர் அவர்கள் அவரது கச்சேரி பம்பாய் சபாவில் ஒருமுறை நடந்தது. செம்பை அவர்கள் ஐந்து மணித்தியாலங்கள் தொடர்ந்து பாடினார் என்பதும், அக்கச்சேரிக்கு மிருதங்கம் வாசித்தவரான பழனி சுப்புடு அவர்கள் ஐந்து தடவைகள் அதே கச்சேரியில் தனியாவர்த்தனம் வாசித்து ஆயிரக்கணக்கான இரசிகப் பெருமக்களின் அமோகமான பாராட்டினைப் பெற்றார் என்பதும் சரித்திரம்.

இவர்கள் வழியில் இணுவையம்பதி கிருபாமூர்த்தி புனிதவதி தம்பதியரின் அருமைப்புதல்வன் செல்வன் அனந்தகோபன், பல்லாண்டு காலமாக மிருதங்கப் பயிற்சியில் ஈடுபட்டு இப்பொழுது அரங்கேறுகிறார் என்ற செய்தி மிகவும் இனிப்பாக இருக்கின்றது.

செல்வன் அநந்தகோபனின் ஆசிரியரான கலாபூஷணம் க.ப. சின்னராசா அவர்கள், சிதம்பரம் சங்கீதபூஷணம் ஏ.எஸ்.இராமநாதன் அவர்களின் முதல்மாணவராவர். அடக்கமானவர். அபாரமாக மேடைகளில் வாசிப்பவர் மிருதங்கத்துறையில் பலர் முன்னுக்கு வரக்காலாயிருந்தவர். குருவினது தனித்துவம், மாணவரான அநந்தகோபனிலும் நன்கு செறிந்திருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

செல்வன் அநந்தகோபனின் முன்னேபரான திரு. வல்லிபுரம் முத்தையா அவர்கள், சிறந்த காவடிக்கலைஞர் ஆவர். அவரும் உரும்பிராய் புத்துவாட்டீ நாகலிங்கம் அவர்களும் நேர்த்தியின் பொருட்டு நல்லூரிற் காவடி எடுப்பது வழக்கம். ஜதி நடைகளுக்கு எற்றவாறு கால், தலை, கழுத்து முதலான அவயவங்கள் அபிநயதுறையில் அசைந்து கொடுப்பதையும் இவர்களது காவடி ஆட்டத்தில் அவதானிக்கலாம். பல்லாயிரம் பேர் பார்த்து இரசித்திருப்பார்கள். செல்வன் அநந்தகோபன் மிருதங்கப்பயிற்சி முன்னோர்வழியைத் துலக்குவதாகவும் அமையலாம்.

தெய்வீகவாத்தியமான மிருதங்கக் கலையைச் சாஸ்திரோக்தமாகக் கற்று, அத்துறையில் இன்று அரங்கேறுகின்ற செல்வன் கிருபாமூர்த்தி – அநந்தகோபன் மேலும் மேலும் நாதோபாசனை மிக்கவராகவும், மிருதங்கக் கலையில் கைவந்நவராகவும் திகழ அருள்புரியும் வண்ணம் எல்லாம் வல்ல கருணாகரப்பிள்ளையாரின் பாததாமரைகளை மனதில் இருத்திப் பிரார்த்தித்து வாழ்த்துவோமாக.

உரும்பிராய் *ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கம்மா அப்பாக்குட்டி ஆசியுரை.

இசைக் கலைக்கும் பெயர் போன கிராமம் இணுவில் கிராமம் ஆகும். இங்கு இசை வாழ்வு வாழ்ந்து பெருமை பெற்றுக் கொண்டிருக்கின்ற பெரும்க்கள் பலரை நான் நன்கு அறிவேன். அவர்களின் வழிவாழியாக நின்று மிருதங்க அரங்கேற்றம் செய்ய இருப்பவர் செல்வன் அனந்தகோபன் அவர்கள். தந்தையார் கிருபாகரமூர்த்தியினதும்,குருவாக அமைந்த கலாபூஷணம் மிருதங்க வித்துவான் திரு.க.ப.சின்னராசா அவர்களினதும், வழி நடத்தலில் அனந்தகோபன் அவர்கள்மிருதங்க கலையில் ஈடுபாடு கொண்டுள்ளார். இவரின் அரங்கேற்றம் எழுச்சியாகவும் இனிதாகவும் நிறைவு பெற எல்லாம் வல்ல தூக்காதேவியைப் பிரார்த்தித்து ஆசி கூறுகிறேன்.

கலாநிதி.செல்வி.தங்கம்மா அப்பாக்குட்டி
சமாதான நீதிபதி
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பளை, ஸ்ரீலங்கா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் பல்கலைக் கழக வணிகத்துறைத் தலைவரின் வாழ்த்துரை

சைவமும் தமிழும் செழித்து வளரும் இணுவில் மண்ணில் கலைஞர்களின் உருவாக்கம் கடினமான காரியமன்று. அந்த வகையில் புதிய கலைஞர் ஒருவர் உருவாகுவது மகிழ்ச்சியைத் தருவதாக உள்ளது. செல்வன் கிருபாகரமூர்த்தி அனந்தகோபன் இணுவில் மண்ணுக்கு பெருமை சேர்க்கும் ஒரு கலைஞனாக உருவாகி இன்று அரங்கேற்றம் நடைபெறுவது மகிழ்ச்சியாக உள்ளது. இந்த அரங்கேற்றத்திற்கு கவிமாமணி வீரமணிஜயர் தலைமை ஏற்பது இவ்விழாவிற்கு இரட்டிப்பான பெருமை தருவதாக உள்ளது.

எமது குல தெய்வமான பரராஜசேகரப் பிள்ளையாரின் அருட்கடாச்சம் பெற்ற குடும்பத்தில் தோன்றிய அனந்தகோபன் விநாயகரின் அருளால் மிகச்சிறப்பாக மிருதங்க கலையைக் கற்றுக் கொண்டுள்ளார். கலாபூஷனம் சின்னராசா அவர்களிடம் மிகச்சிறப்பாக மிருதங்கக் கலையை கற்றுக் கொண்ட செல்வன் அனந்தகோபன் பிறப்பிலே இக்கலை கைவரப் பெற்றவர் எனக்கூறினால் அது மிகையாகது.

தெய்வீகக் கலையான மிருதங்கக் கலையை ஐயம் திரி புறக் கற்ற வித்துவான் போல் செல்வன் அனந்தகோபன் விளங்குகின்றார். அவரது தந்தை திரு கிருபாகரமூர்த்தி மலர்களால் இறைவனுக்கு செய்த பூசையின் பலனை இன்று நேரடியாக காண்பது மகிழ்ச்சி தருவதாக உள்ளது. ''தந்தை மகற்காற்றும் உதவி அவையத்துள் முந்தி இருப்பச் செயல்'' என்ற பொய்யா மொழிப் புலவரின் புகழுரைக் கிணங்க , செல்வன் அனந்தகோபன் குலத்தின் பெயரைப் விளங்கச் செய்வார் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அவரது புகழ் உலகெங்கும் பரவ வேண்டும் என இறைவனை வேண்டுவதுடன் மிருதங்க கலையில் சிறப்பாக விளங்க வேண்டும் என வாழ்த்துகிறேன்.

வாழ்க அவர் புகழ் என வாழ்த்தும்.

கே.கே. எஸ் வீதி
கோண்டாவில் மேற்கு
கோண்டாவில்

*க. தேவராசா*
தலைவர்
வணிகத்துறை
யாழ் பல்கலைக் கழகம்
திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை.

இணுவில் என்றாலே கலைகளின் பிறப்பிடம் என்று கூறுவார்கள். பல கலைஞர்கள் இங்கு பிறந்து வாழ்வதும் பொதுவாகவே இணுவில் மக்கள் கலையைப் போற்றி, கலைஞர்களைப் போற்றி இசைபாட வாழ்வதுமே இதற்குக் காரணம்.

இணுவிலைச் சேர்ந்த கிருபா – அனந்தகோபனின் மிருதங்க அரங்கேற்றம் 28.11.99ல் இடம் பெறும் நல்ல செய்தி அறிந்து பெரிதும் மகிழ்வுறுகின்றேன். கலாபூஷணம் க.ப.சின்னராசா அவர்களிடம் மிருதங்கக் கலையைப் படித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் பிரசித்திபெற்ற வித்துவான் கலாபூஷணம் சின்னராசா அவர்களைக் குருவாகக் கொண்ட அனந்தகோபன் பாக்கியசாலியே.

இன்று பலர் பல கலைகளைப் பயிலுகின்றனர். ஆனால் இவரே அதைச் சீராகச் கற்று அத்துறையில் முழுமனதுடன் ஈடுபட்டு, கலைக்கும் தமக்கும் புகழ் ஈட்டுகின்றார். செல்வன் அனந்தகோபன் மிருதங்கம் வாசிக்கும் துறையில் அரங்கேற்றத்துடன் நின்று விடாமல் தொடர்ந்து மேன்மேலும் கற்று கலைத் தேவிக்கு தொண்டுகள் பல ஆற்ற வேண்டும்.

எதிர் காலத்தில் செல்வன் அனந்தகோபன் இத்துறையில் நன்கு பிரகாசிக்க கலைத்தெய்வம் சரஸ்வதியின் கடாட்சம் பூரணமாகப் பெற வேண்டும் என நல்லாசி கூறி வாழ்த்துகின்றேன்.

*து.வைத்திலிங்கம்,*
மேலதிக அரச அதிபர்,
யாழ்-மாவட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பிரதேச செயலரின்
# ஆசியுரை

இணுவிலைச் சேர்ந்த திரு.கிருபாகரமூர்த்தி அவர்களின் புதல்வன் திரு.அனந்தகோபனின் மிருதங்க அரங்கேற்றம் சம்பந்தமாக வெளியீடப்படும் மலருக்கு இவ் ஆசிச் செய்தியை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். மிருதங்கம் என்பது தெய்வீக கலைகளில் ஒன்றாகும். அதன் இனிமையும் சுருதியும் இறைவனை மகிழ்விக்கும் தன்மை வாய்ந்தது. திரு.அனந்தகோபன் இக்கலையைப் பிரபல மிருதங்க வித்துவான் கலாபூஷணம் க.ப.சின்னராசா அவர்களிடம் முறைப்படி பயின்றுள்ளார். இணுவில் பல கலைஞர்களையும் கலா வித்தகர்களையும் தோற்றுவித்துள்ளது. திரு.அனந்தகோபன் இப்பாரம்பரியத்தின் பங்காளராகச் சிறந்து விளங்குவார் என்பதில் ஐயமில்லை. அரங்கேற்ற விழா சிறப்பாக நடைபெறவும் செல்வன் அனந்தகோபன் இத்துறையில் சிறந்து விளங்கவும் எல்லாம் வல்ல பார்வதி – பரமேஸ்வரனைப் பிரார்த்திக்கின்றேன்.

பிரதேச செயலகம்,
உடுவில்.

*ஆ.மகாலிங்கம்,*
பிரதேச செயலாளர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

அண்ணன் பரராசசேகரப் பிள்ளையாரும் , தம்பி கந்தவேள் பெருமானும் அருள்பாலிக்கும் தெய்வீக கலைப் பூமியாம் இணுவைப்பதியின் பெருமக்கள் திரு. திருமதி. கிருபாகரமூர்த்தி தம்பதிகளின் தவப்புதல்வன் செல்வன் அனந்தகோபன் அவர்கள் தனது மிருதங்கக் கலையின் வித்துவத்தை அரங்கேற்றும் செய்தியில் அகமகிழ்கின்றோம்.

இணுவில் கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர் சபையில் கலைபயிலும் மாணவன் .மிக்க அமைதியும் அடக்கமும் உயர் பண்பாடும் கொண்ட ஓர் பிள்ளை கலை உணர்வு மிக்க பெற்றோரின் வழிகாட்டலில் மிகச் சிறந்த மிருதங்க வித்துவான் கலாபூஷணம் திரு. க. ப. சின்னராசா அவர்களைக் குருவாக ஏற்று முறைப்படி அக்கலையைப் பயின்று வருகிறார். இவரின் குருவானவர் துறைசார்ந்த அனுபவ முதிர்ச்சியும் , ஆற்றலும் உடையவர், மிக்க விசுவாசத்துடன் தனது சக்தி முழுவதையும் திரட்டி கலை நுணுக்கங்களை பிள்ளைகளுக்கு ஊட்டுபவர். குருவின் ஆசியுடன் இந்த இளங் கலைஞன் மிளிருவான்.

கலைப்பூமி இணுவைப்பதியின் இளங்கலைஞன், கலை உணர்வு மிக்க பெற்றோரின் புதல்வன் , நல்ல குருவின் சிஷ்யன். எனவே இவரின் விரல்களினால் எழும்பும் மிருதங்க ஓங்கார நாதம் அகில மெல்லாம் ஒலிக்கும். எல்லோரையும் இறை அனுபவத்திற்கு இட்டுச் செல்லும் என்று வாழ்த்தி வணங்குகிறோம்.

சைவப்பணிமனை"
இணுவில் கந்தசுவாமிகோயில்
*இளந் தொண்டர் சபை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

சைவமும், தமிழும் தொன்மையாக வளர்ந்து வரும் பதியாகிய இணுவையம் பதியில் பலகலைகளும் அவற்றுடன் சேர்ந்து வளர்க்கப்பட்டு வருகின்றன. அப்படியான துறையில் மிருதங்க வாசிப்பு, கலை அங்கே குறிந்த ஓர் இடத்தை பெறுகின்றது.

இக்கலைகள் எல்லாம் 19ம் நூற்றாண்டில் குருகுலவித்தையாக பயிலப்பட்டு வந்தது. 20ம் நூற்றாண்டின் அதேவகையில் குரு, சிஷ்யன் முறைப்படி மடங்கள் ஆதினங்களில் இப்பொழுதும் பயிலப்பட்டு வருகின்றன. அத்துறையில் இளம் தளிரான கிருபாகரமூர்த்தி அனந்தகோபன் என்பவர் அத்துறையில் தன்னை ஈடுபடுத்தி இன்று அரங்கேற்றம் காணப்போகின்றார்.

இவர் சிறு வயது முதல் கல்வியிலும், இசையிலும் ஆலயத்தொண்டுகளிலும் தன்னை ஈடுபடுத்தி வந்துள்ளார். அதன் பலாபலனாக க.பொ.த. உயர்தரத்தில் கணிததுறையிலும் பல்கலைக்கழகம் புக ஆயத்தமாக உள்ளார். அதே வேளையில் தன் கண்களில் ஒன்றான இசைத்துறையிலும் பயில பல்கலைக்கழகம் புக ஆயத்தமாக உள்ளார்.

இவர் கல்வித்துறையில் , கணிததுறையில் பல்கலைக்கழக அனுமதி பெற்று அதில் சிறப்பு பேறுகள் பெற்ற வேளையிலும் தன் மற்றொரு கண்ணான இசையிலும் தன்னை ஈடுபடுத்தி அதன்மூலம் பலன்களை பெற்று தரமான கலைஞனாக திகழவேண்டும் என்பதே எங்கள் வாழ்த்தாக இருக்கும். இதனை இவர் வழிபட்டு வரும் கணபதியை வேண்டுகிறேன்.

இங்ஙனம்,

**நடராஜா-ஸ்ரீமான்**

விநாயக அடியார்சார்பில்

ஸ்ரீ. பரராஜசேகரப் பிள்ளையார் கோயில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

கலாபூஷணம் திரு.ப. சின்னராசா அவர்களிடம் மிருதங்க இசை பயின்று, அரங்கேறும் செல்வன் கிருபா அனந்தகோபனை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இன்றைய இக்கட்டத்திலும் எமது கலை பண்பாடு மரபுகளைப் பேணி வளர்க்கும் இது போன்ற முயற்சிகள் வரவேற்கத்தக்கவை.

எங்கள் பெருமதிப்பிற்குரிய மிருதங்கப் பேராசான் திரு.ஏ.எஸ் இராமநாதன் அவர்களின் மாணவர் பரம்பரையில் மூத்தவராகத் திகழும் சின்னராசா அவர்கள் எம்கெல்லாம் வழிகாட்டியாகவும் விளங்குகிறார். அவரின் பல மாணவர்களின் அரங்கேற்றங்களுக்குக் கஞ்சிரா வாசித்தவன் என்றவகையில் அம்மாணவர்களின் கலைத்திறனை நான் நன்கறிவேன். அவர்கள் வரிசையில் செல்வன் அனந்தகோபனும் பிரகாசிப்பார் என்பது திண்ணம்.

சங்கீத ரத்தினம்
***எம்.சிதம்பரநாதன்***

**டச்சி வீதி,**
**தொல்புரம்,**
**சுழிபுரம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்து

செல்வன் கிருபா அனந்தகோபன் அவர்களது மிருதங்க அரங்கேற்றம் 28.11.1999 அன்று இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோவிளின் நடைபெற இறையருள்கிட்டியுள்ளது. இவருக்கான பாடகராக என்னை நியமித்துள்ளமை மகிழ்ச்சியைத் தருகிறது. இவரது குருவாக அமைந்த கலாபூஷணம் திரு.ப. சின்னராசா அவர்கள் எதையும் திருத்தமாகச் செய்ய வேண்டு மென்ற எண்ணங்கொண்டவர். இவரது தயாரிப்பில் உருவான மாணவர்கள் சிறப்பாகவே மிருதங்கத் தொழிலைச் செய்கின்றனர். இந்த வகையில் குருவின் நடத்தையையும் பின்பற்றித் தனது தொழிலைச் செவ்வனே செய்ய இறையருளைப் பிராத்தித்து வாழ்த்துகிறேன்.

சங்கீதபூஷணம்
***க.கணபதிப்பிள்ளை***
இளைப்பாறிய பிரதிக் கல்விப்பணிப்பாளர்
வலிகாமம் கல்வி வலையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரணவாய் மூத்தவிநாயகர்தேவஸ்தான

## ஆசிச்செய்தி

நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானம்
கற்குஞ் சரக்கன்று காண்

ஆய கலைகள் அறுபத்து நான்கில் தூயலயம்சேர்மிருதங்கத்ப்பொன்னரங்கம் தில்லையிலே நந்தியெம் பெருமான் வாசிக்க நடராஜன் திருநடம்புரிந்தான். இதுகாறும் இக்கலை நம்மிடையே வளர்ந்தது அன்னவன் திருவருளே இன்று, இணுவையூர் நம்பி அனந்தகோபன் அரங்கேற்றும் கலைக்கு அவன் கருணை வெள்ளம் பெருகுவதாக. எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் கருணை கிட்டுவதாக.

சுபம்.

தேவஸ்தானம்

******

****

***

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி மறப்பது நன்றன்று



எமது புதல்வன் செல்வன் கிருபா அனந்தகோபனின் மிருதங்க அரங்கேற்றத்திற்காக ஊக்கமும் உற்சாகமும் கொடுத்து அயராது பயிற்றுவித்த க.ப.சின்னராசா ஆசிரியர்கட்கும், எமது அழைப்பை ஏற்றுவருகை தந்து சிறப்பித்த மேலதிக அரங்சாங்க அதிபர், (யாழ்செயலகம் )வலி – தெற்கு பிரதேசச் செயலகம் உடுவில் அரசாங்க அதிபர் வரவேற்றுரை வழங்கியோர், ஆசியுரை வழங்கியோர்கள்,வாழ்த்துரை வழங்கியோர்கள், மங்களஇசை வாசித்தவர்கள், அரங்கேற்றம் சிறப்புறகாரணமான பாடகர், பக்கவாத்தியக்கலைஞர்கள் மற்றும் மதிப்புரை – வழங்கியோர்கள் நன்றியுரை வழங்கியோர், நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கிய மதிப்புக்குரிய தலைவர் பிரம்மஸ்ரீ – வீரமணி ஐயர் அவர்கட்கும் , அரங்கேற்றம் மிகவும் சிறப்பாக அமைய பரராசசேகரப்பிள்ளையார் கல்யாண மண்டபத்தினை தந்து உதவிய மதிப்புக்குரிய சோமஸ்கந்தசர்மா ஐயா அவர்கட்கும், ஒலி, ஒளி, வீடியோ புகைப்படம் தந்து உதவியோர்கள் இம்மலரை அச்சிட்டு தந்த நல்லூர் பிள்ளையார் அச்சகம் அவர்கட்கும், மண்டப அலங்காரம் செய்ய உதவியோர்கள், அனைவருக்கும் எமது இதயம் நிறைந்த நன்றிகள் நவில்கின்றோம்.

இங்ஙனம்,

**கைவண்ணகலைச்செல்வன்**

*கிருபாகரமூர்த்தி தம்பதிகள்*

PILLAIYAR OFFSET PRINTERS NALLUR

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org